**வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபை**

**வவுனியா மாவட்டம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 24 பெப்ரவரி 2020 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை 20 யூன் 2020 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 23 யூலை 2020 ஆந் திகதியும் சபையின் தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர்த்து வவுனியா வடக்கு பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்காக பின்பற்றப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கணக்கியல் கொள்கைகள் நிதி அறிக்கைகளில் வெளியிடப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. |

#### (ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிரதேச சபைக்கு சொந்தமான 150 ஏக்கர் நிலத்தின் மதிப்பு, 13 கடைகள் மற்றும் 03 வாகனங்கள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. | அனைத்து சொத்துகளும் கணக்கிடப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ii) | ரூபா 3,600,000 மதிப்புள்ள ஐந்து நிலையான வைப்புத்தொகைகளுக்கான மீளாய்வாண்டிற்கான வட்டி கணக்கில் காட்டப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்கான வட்டி வருமானம் அடையாளம் காணப்பட்டு கணக்கிடப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

### (இ) பெறவேண்டிய கணக்குகள் கொடுக்கப்பட வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 31 திசெம்பர் 2019 ஆம் திகதியில் முத்திரை நிலுவைத் தொகை ரூபா. 672,900 ஆக காணப்பட்ட போதிலும் அந்தத் தொகையில் 01 தொடக்கம் 04 ஆண்டுகள் வரையிலான முத்திரை நிலுவைத் தொகை ரூபா. 372,900 சேர்க்கப்பட்டிருந்தன. | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (ii) | 31 திசெம்பர் 2019 ஆம் திகதியின் பிரகாரம் நிலுவையான வாகன வாடகை வருமானம் ரூபா. 328,982 ஆக காணப்பட்ட போதிலும் அந்தத் தொகையில் ரூபா. 260,007 பெறுமதியானது 01 தொடக்கம் 09 ஆண்டுகள் வரையிலான நிலுவைத் தொகையாக காணப்படுகின்றது. | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (iii) | 31 திசெம்பர் 2019 ஆம் திகதியின் பிரகாரம், வாடகை நிலுவைத் தொகை ரூபா. 149,150 ஆக காணப்பட்ட போதிலும் அதில் ரூபா. 103,350 பெறுமதியானது 01 தொடக்கம் 03 ஆண்டுகள் வரையிலான நிலுவைத் தொகையாக காணப்படுகின்றது. | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (iv) | 31 திசெம்பர் 2019 ஆம் திகதியில் செலுத்த வேண்டிய தொகை ரூபா. 15,000 முற்பணம் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நிலுவைத் தொகையாக காணப்படுகின்றது. | நிலுவைத் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

### (ஈ) கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இல்லாதிருந்தமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா. 91,176,811 பெறுமதியான இரண்டு கணக்குகளுடன் தொடர்புடைய சான்றுகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதி அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கணக்கு நிலுவைகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்ட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

### 1.4 இணங்காமைகள்

#### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின்<br>- 126(X)(ஆ) பிரிவு | பிரதேச சபையினால் சுற்றுலா வியாபாரப் பகுதிகளுக்கான உரிமம் வழங்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றுலா வியாபாரத்திற்கான உரிமம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக ஒழுங்கு விதிகள் | | | |
| | விதி இலக்கம் 5(7) | நிதி மற்றும் களஞ்சியசாலைகளுக்கான போதுமான உள்ளகக்கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதி மற்றும் களஞ்சியசாலைகளுக்கான போதுமான உள்ளகக்கணக்காய்வு மேற்கொள்ளப்பட வேண்டும் | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |
| | விதி இலக்கம் 59 | | தொடர்புடைய கணக்கெடுப்பு பட்டியல்களின் விதிகளின்படி தெளிவானதாகவும் சரியான நேரத்தில் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |
| | விதி இலக்கம் 68 | பிரதேச சபையின் பகுதியில் அபிவிருத்தியினை மேற்கொள்ளப்படாத காணிகள் எதுவும் இனங்காணப்பட்டிருக்கவில்லை. விதிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | விதிகளின்படி தொடர்புடைய வரிகளை வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| விதி இலக்கம் 217 | பிரதேச சபை சட்டத்தின் இலக்கம் 46 இற்கமைய அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்களின் பதிவு பராமரிக்கப்பட்டிருக்கவில்லை. | காணிகள் மற்றும் கட்டிடங்களின் பதிவு பராமரிக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,054,822 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 4,544,628 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - | - | - |
| (ii) | வாடகைகள் | 2,578,600 | 1,323,718 | 1,323,718 | 478,132 | 1,500,000 | 1,495,695 | 1,420,875 | 535,300 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 385,000 | 1,425,725 | 1,425,725 | - | 1,610,000 | 1,149,200 | 1,149,200 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 4,383,000 | 5,444,639 | 6,611,047 | 5,607,546 | 4,176,000 | 3,547,005 | 5,927,758 | 4,008,624 |
| | **மொத்தம்** | | | | **6,085,678** | | | | **4,543,924** |

#### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வடக்கு மாகாண சபையிலிருந்து 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,934,646 தொகையான நீதிமன்ற தண்டப்பணங்கள் மற்றும் ரூபா.672,900 முத்திரைக்கட்டணத் தொகையும் பெற்றுக்கொள்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பெறப்பட வேண்டிய வருமானங்கள் உரிய காலத்தில் உடனடியாக அறவிடப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

## 3. செயற்பாட்டுமீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், சுகாதாரம், பொதுப்பயன்பாடு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையிளால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

#### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், 30 முக்கிய விடயங்கள் தொடர்பில் உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் 2019 திசெம்பர் 31 வரையிலும் விடயங்கள் தொடர்பில் உப விதிகள் உருவாக்கப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமான விடயங்களுக்கு உப விதிகள் உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

#### (ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் எந்தவொரு செயல்நடவடிக்கைத் திட்டங்களும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | செயல் திட்டத்தை தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

#### (இ) எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடைவதற்கு தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ரூபா. 25.94 மில்லியன் பெறுமதி நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்பட்ட 29 நிர்மாணவேலை திட்டங்களில், 08 திட்டங்களுக்கான நிர்மாண வேலைகள் மட்டுமே முழுமையாக நிறைவேற்றப்பட்டிருந்தன, 08 திட்டங்களுக்கான நிர்மாண வேலைகள் நிறைவு பெற்றிருக்கவில்லை. மேலும், 13 திட்டங்களுக்கான வேலைகள் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தன. | எதிர்பார்க்கப்பட்ட வெளியீட்டினை அடையவதற்கு முகாமையானது திறமையாக செயல்பட வேண்டும் | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

(ஈ) திண்மக்கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் திண்மக்கழிவுகளை சேகரித்தல், பிரித்தல் மற்றும் மீள்சுழற்சி செய்வதற்கான முறையான ஏற்பாடு எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திண்மக்கழிவு முகாமைத்துவத்தில் முகாமையானது அவதானம் செலுத்தப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| சபையில் 30 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் இருந்தபோதிலும், அந்த வாகனங்கள் அனைத்தையும் ஓட்ட ஒரு சாரதி மட்டுமே சபைக்கு இணைக்கப்பட்டிருந்தனர். | வாகனம் மற்றும் இயந்திரங்களினை விளைதிறனாகவும் வினைத்திறனாகவும் பயன்பாட்டிற்கு ஏற்ற ஒரு திட்டத்தை வடிவமைத்து செயல்படுத்தப்படல் வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபையில் உள்ள 11 வெற்றிடங்களை நிரப்புவதற்கு எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை | பதவிகளுக்கான தற்போதுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

**3.4 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 134 (1) இன் படி பிரதேச சபையினால் மேம்படுத்தப்பட்ட, வீத வரிகளை மதிப்பீடு செய்வதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான ஏற்பாடுகள் ஒழுங்குமுறைகள் தொடர்பான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | சட்டத்தின் பிரிவு 134 (1) இன் படி பிரதேச சபையினால் மேம்படுத்தப்பட்ட, வீத வரிகளை மதிப்பீடு செய்வதற்கும் பெற்றுக்கொள்வதற்கும் தேவையான ஏற்பாடுகள் ஒழுங்குமுறைகள் தொடர்பான தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பிரதேச சபைக்கு சொந்தமான 22 வாகனங்களின் வாகன வருமான உரிமங்களை சரியான நேரத்தில் பெறத் தவறியதால், மீளாய்வாண்டிற்கான வாகன வருமான உரிமங்கள் ரூபா 24,255 தண்டப்பணமாக செலுத்தப்பட வேண்டியிருந்தது. | சரியான நேரத்தில் வாகன வருவாய் உரிமங்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும், தாமதங்கள் காரணமாக செலுத்த வேண்டிய தண்டப்பணங்கள் அரசுக்கு சுமையாக காணப்படக்கூடாது. | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (இ) | பிரதேச சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா. 1,000,000 பெறுமதியான இரண்டு ஒப்பந்த வேலைகளில் ஒப்பந்தங்களில் குறிப்பிடப்பட்டிருந்த பந்தி 1.13 இன் பிரகாரம், 204 நாட்கள் தாமத காலம் ஏற்படின் அறவிடக்கூடிய ஆகக்கூடிய தாமதக் கட்டணம் ரூபா.100,000 பெறுமதியான தொகையை அறவிட்டு கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தாமதமாக கட்டணம் நிர்ணயிக்கப்பட்டதன் பிரகாரம் அறவிடப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (ஈ) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 396,550 பெறுமதி செலவில் மருந்தகத்தில் உள்ள ஒரு தனியார் காணியில் குழாய் கிணறு கட்டப்பட்டு, காணியின் சட்டபூர்வமான உரிமையை பிரதேச சபைக்கு கையகப்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காணியின் சட்டபூர்வமான உரிமையை பிரதேச சபைக்கு கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |
| (உ) | ஹலம்பகஸ்வேவாவில் இரண்டு கிணறுகள் நிர்மாணவேலைக்காக ரூபா. 1,177,796 மில்லியன் செலவிடப்பட்டது. 125மி.மீ.க்கு BOQ இன் இலக்கம் 10 முதல் 15 வேலை பொருட்கள், ஆனால் 125 மி.மீ அகலமான சீமெந்து அடுக்குகள் (Cement Slab) பயன்படுத்துவதற்குப் பதிலாக 100மி.மீ அகலமான சீமெந்து அடுக்குகளை (Cement Slab) பயன்படுத்தினர். இருப்பினும், உண்மையில் 125மி.மீ அகலமான சீமெந்து அடுக்குகளுக்கு (Cement Slab) ரூபா.355,415 செலுத்தப்பட்டது. | தேவையான தரத்திற்கு ஏற்ப நிர்மாணவேலைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

### 3.5 சொத்து முகாமைத்துவம்

#### 3.5.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பழுதுபார்த்து பயன்படுத்தக்கூடிய பிரதேச சபைக்கு சொந்தமான 08 வாகனங்களை பழுதுபார்த்து பயன்படுத்த எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்கள் பழுதுபார்த்து விளைதிறனாகவும் வினைத்திறனாகவும் பயன்படுத்தப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

#### 3.5.2 சுவீகரிக்கப்படாதசொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைக்கு சொந்தமான 68 பகுதிகளைக் கொண்ட 150 ஏக்கர் காணியில் குடியேற்றுவதற்கும் உரிமையினை மாற்றுவதற்கும், 10 வாகனங்களின் உரிமையினை மாற்றுவதற்கும் எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களின் உரிமையை பெற சபையினால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. |

#### 3.5.3 விளைவற்ற/குறைபயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபைக்கு சொந்தமான 10 வாகனங்கள் 01 தொடக்கம் 08 ஆண்டுகள் வரையும் செயற்படுத்தப்படாமல் காணப்படுகின்றன. | சொத்துக்களை பயன்னடுத்தப்படாமல் வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 2013 ஆம் ஆண்டில் ரூபா 2,298,816 பெறுமதி செலவில் கட்டப்பட்ட இரண்டு வாராந்த சந்தைகள் 2020 ஏப்ரல் 24 வரையும் பயன்படுத்தப்படவில்லை. | சொத்துக்களை பயன்னடுத்தப்படாமல் வினைத்திறனாகவும் விளைதிறனாகவும் பயன்படுத்தப்படுவதை உறுதி செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.5.4 வாகனப்பயன்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| பிரதேச சபைக்கு சொந்தமான 09 வாகனங்களின் உரிமையை உறுதிப்படுத்தும் பதிவு சான்றிதழ்கள் எதுவும் காணப்பட்டிருக்கவில்லை | உரிமையை உறுதிப்படுத்தும் பதிவு சான்றிதழ்களைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

### 3.6 பெறுகை

### 3.6.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் பெறுகைத் திட்டம் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அதற்கேற்ப பெறுகை செய்யப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக்கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான முறையான கணக்காய்வுத் திட்டம் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வு திட்டங்கள் சரியான நேரத்தில் தயாரிக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை |

## 4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்புக்களும் பதிலளிக்கப்படாத ஐயவினாக்களும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரட்டைப்பெரியகுளம் பகுதியில் உள்ள முச்சக்கர வண்டி நிறுத்துமிடத்திலிருந்த வாகன தரிப்பிடக் கட்டணம் அறவிட எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனத தரிப்பிடக்கட்டணத்தை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | 204 குழாய் கிணறுகளை முறையாக பராமரிக்காததால் பல ஆண்டுகளாக கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. | குழாய் கிணறுகள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும். | கருத்துரை வழங்கப்பட்டிருக்கவில்லை. |